# கோயம்புத்துார் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி**
**வணக்கத்திற்குரிய மேயர்**,
கோயம்புத்துார் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்துார் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்துார் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லுார், கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்துார்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 11617 / 2012 / எம்சி. 8 நாள் : 18.10.2012**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்துார் மாநகராட்சி - மாமன்ற சாதாரணக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்துார் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 25.10.2012 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்துார் மாநகராட்சி

/உண்மை நகல் /

**மாமன்ற செயலாளர்**

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்துார் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்துார் மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்டம் - அக்டோபர் 2012

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| 1 | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண் 17 – மருதமலை அடிவாரம் பகுதியில் புதியதாக கட்டப்பட்ட கழிப்பறைகள் - பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் விடுதல் - ஆண்டு மதிப்பு நிர்ணயித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 2 | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண் 17 - மருதமலை அடிவாரம் பகுதியில் புதியதாக கட்டப்பட்ட 6 கடைகள் - பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் விடுதல் - ஆண்டு மதிப்பு நிர்ணயித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 3 | மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு - காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வார்டு எண் 54 - மாநகராட்சி வணிகவளாக கடைகள் -மாற்றுத் திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்தது -(நடைபாதை இரும்பு மேம்பாலம் அருகில்) – 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 4 | மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண். 51- காந்திபுரம் 7வது வீதி தொடர்ச்சி வணிகவளாக கடை எண். 1 திரு.செ.அரசு என்பவருக்கு – ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவு பெற்றதால் வாடகை உயர்வுடன் மீண்டும் மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 5 | மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண். 50- டாடாபாத் யார்டு சாலை மற்றும் 100 அடி சாலை சந்திப்பில் - மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு 25’x 20’ அளவு கொண்ட இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவு பெற்றதால் 15% வாடகை உயர்வுடன் மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 6 | நகரமைப்பு பிரிவு - கிருஷ்ணராயபுரம் கிராமம் - மாநகராட்சிக்குச் சொந்தமான 70 சென்ட் பரப்பளவு இடம் - தமிழ்நாடு மின்சார வாரியத்தால் பாப்பநாய்க்கன்பாளையம் துணை மின் நிலையம் அமைக்க முன்நுழைவு அனுமதி வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | வடக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண் 55 – அம்மன்குளம் வாய்க்கால் மேடு சாலையின் நடுவில் உள்ள மூன்று உயர்மின் அழுத்த கம்பங்களை மாற்றி அமைத்தல் - தமிழ்நாடு மின்உற்பத்திக் கழகத்திற்கு மதிப்பீட்டுத் தொகை செலுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | பொறியியல் பிரிவு - குறிச்சி, குனியமுத்தூர். ஆழியார் கூட்டு குடிநீர் திட்டம் - மின்தடை சரிசெய்ய புதிய 500 KVA வாட்ஸ் ஜெனரேட்டர் பொருத்துதல் - விலைப்புள்ளி ஏற்றல்- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 9 | பொறியியல் பிரிவு - கவுண்டம்பாளையம் வடவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டம் - 1) அதிகபட்ச அளவு குடிநீர் பெற (Ultimate stage) நீர்உந்து மற்றும் அதற்கான உபகரணங்கள் பொருத்துதல் 2) வீரபாண்டி பிரிவு பூஸ்டர் நிலையத்தில் புதியதாக 315 KVA கொண்ட (200 குதிரைத் திறன் ஜெனரேட்டர் பொருத்தி இயக்குதல் - தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை கோர மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| 10 | நகரமைப்புப் பிரிவு - காந்திபுரம் பகுதி சாலைகளில் மேம்பாலம் கட்டுதல் - பணி மேற்கொள்வதற்காக மாநகராட்சி சாலைகளை நெடுஞ்சாலைத்துறைக்கு தற்காலிகமாக ஒப்படைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 11 | பொறியியல் பிரிவு - குடிசைப்பகுகள், அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு தனியார் டேங்கர் லாரிகள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 12 | பொது சுகாதாரப் பிரிவு - வீடற்றோர் தங்கும் விடுதி அமைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 13 | Jnnurm – ஆசிய நாடுகளின் நகர்புற வளர்ச்சிக்கு உதவி செய்யும் நிறுவனம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி இணைந்து மாநகராட்சி வளர்ச்சி திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பது – பங்குத்தொகை செலுத்துவது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

**அ)** **திருக்குறள்**

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

**(குறள் - 15)**

**விளக்கம்**

பெய்யாமலும் மிகப் பெய்தும் வாழ்வைக் கெடுப்பதுவும், நலிந்தோர்க்குத் துணையாக நின்று காப்பதுவும் வான்மழையேயாம்.

**திருவள்ளுவர்.**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**சிறப்புத் தீர்மானம்**

தமிழ்நாட்டிற்கு மின்சார பாதுகாப்பு வழங்கவும், சூரிய சக்தி மூலம் 3000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் உயர்ந்த இலட்சியத்திற்காகவும், தமிழகத்தின் அனைத்து தரப்பு தொழிற்சாலைகளுக்கும், நிறுவனங்களுக்கும், பொதுமக்களுக்கும் பயனளிக்கும் வகையிலும், தொய்வில்லாத தொழிற் வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையிலும் ‘‘தமிழ்நாடு சூரிய ஆற்றல் கொள்கை 2012‘‘ என்ற கொள்கையை அறிவித்துள்ள தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்குவதற்கு அல்லும் பகலும் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சா் புரட்சித்தலைவி அம்மா அவா்களுக்கு இம்மாமன்றம் தனது நெஞ்சார்ந்த பாராட்டுக்களை சமா்ப்பித்து மகிழ்வடைகிறது என்ற சிறப்பு தீா்மானம் வணக்கத்திற்குரிய மேயா் அவா்களால் முன்மொழியப்பட்டு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவா் திரு.ஆா்.பிரபாகரன் அவா்களால் வழிமொழியப்பட்டது.

**சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 25.10.2012**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## பொருள் எண் 1

கோயம்புத்தூா் மாநகராட்சி மேற்கு மண்டலம் வாா்டு எண்.17 மருதமலை அடிவாரம் பகுதியில் மாநகராட்சி மூலம் 10 அறைகளை கொண்ட கழிப்பறைகள் கட்டப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு தயாா் நிலையில் உள்ளது. மேற்கண்ட கழிப்பறைகளை பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் விடுவதற்கும், இவ்வினத்திற்கு உண்டான தொகைகள் கீழ்கண்டவாறு நிா்ணயம் செய்யவும்,

| வரிசை எண். | வைப்புத் தொகை (ரூ) | காப்புத் தொகை (ரூ) | வங்கி உறுதி சான்றிதழ் (ரூ) | வங்கி உறுதி சான்றிதழ் மதிப்பிற்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | 25000/- | 25000/- | 200000/- | 50000/- |

மேற்படி கழிப்பறை 209 சதுரடி கொண்டது. இது 10 அறைகளை கொண்டுள்ளது. அதில் ஆண்கள் 5 (2 குளியலறை, 3 கழிப்பறை) அறைகளும், பெண்களுக்கு 5 (2 குளியலறை, 3 கழிப்பறை) அறைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்திற்கு பொதுப்பணித்துறையின் ஒரு சதுரடி மதிப்பு ரூ.20.40 (20.40 x 209 = 4263 x 12 மாதத்திற்கு = ரூ.51163/-) ஆகும்.

எனவே அரசு நிா்ணயத்தொகை ரூ.6000/மாதத்திற்கு, ஆண்டு மதிப்பு ரூ.72,000/- என நிா்ணயம் செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவின் ஒப்புதல் பெற அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண்.100 நாள்.21.9.2012-ன்படி அலுவலகக்குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீா்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.9750/ 2012 / அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 247 நாள் : 25.10.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீா்மான எண் 100 நாள் 21.09.2012-ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

கோயம்புத்தூா் மாநகராட்சி மேற்கு மண்டலம் வாா்டு எண்.17 மருதமலை அடிவாரம் பகுதியில் மாநகராட்சி மூலம் 6 கடைகள் கட்டப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு தயாா் நிலையில் உள்ளது. மேற்கண்ட கடைகளை பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் விடுவதற்கும், இவ்வினத்திற்கு உண்டான தொகைகள் கீழ்கண்டவாறு நிா்ணயம் செய்யவும்,

| வரிசை எண். | வைப்புத்தொகை (ரூ) | காப்புத்தொகை (ரூ) | வங்கி உறுதி சான்றிதழ் (ரூ) | வங்கி உறுதி சான்றிதழ் மதிப்பிற்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | 25,000/- | 25,000/- | 2,00,000/- | 50,000/- |

மேற்படி கட்டிடம் 160 சதுரடி கொண்ட 6 கடைகள் மொத்தம் 960 சதுரடி ஆகும். இப்பகுதியில் பொதுப்பணித்துறையின் ஒரு சதுரடி மதிப்பு ரூ.40.00 (40.00 x 160= 6400) ஒவ்வொரு கடைக்கும் ரூ.6400/- என மாதவாடகை நிர்ணயம் செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதல் பெற அனுமதி வேண்டப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.101 நாள்.21.9.2012-ன்படி அலுவலகக்குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.9751/ 2012 / அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 248 நாள் : 25.10.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 101 நாள் 21.09.2012-ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 3**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - காந்திபுரம் நகர பேருந்து நிலையம் மாநகராட்சி வணிகவளாக கடைகள் -மாற்றுத் திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்தது -(நடைபாதை இரும்பு மேம்பாலம் அருகில்) – 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்தல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண்.147, ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2. அரசாணை எண். 92 ந.நி.(ம).கு.வ.துறை நாள். 03.07.2007.
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 106 நாள் 21.09.2012

******

கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.54-ல் காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வணிகவளாகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்தது ( நடைபாதை இரும்பு மேம்பாலம் அருகில் ) ஒதுக்கீடு செய்யப்பட்ட 10 கடைகள் தற்போது உபயோகத்தில் உள்ளது.

9 ஆண்டுகளுக்கு மேல் உள்ள கடைகளுக்கு அரசின் ஆணை எண். 92 ந.நி.ம.கு.வ.துறை நாள். 03.07.2007-ன்படி தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் பொதுப்பணித்துறையின் வாடகை மதிப்பீட்டு கணக்கீட்டின்படி உயர்வு செய்யலாம்.

உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்யவும் மற்றும் வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் சேவை வரி 12.36% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்துசெய்து மறுஏலத்திற்கு கொண்டுவரவும் நடவடிக்கை எடுத்திட அனுமதி வேண்டப்படுகிறது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 106 நாள் 21.09.2012ல் உரிமம் ஒதுக்கீடு செய்து 9 ஆண்டுகள் முடிவுற்ற கடைகளுக்கு தற்போதைய சந்தை மதிப்பில் வாடகை நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீமானிக்கப்பட்டது.

இக்கடைகளில் ஒதுக்கீடு பெற்றவர்கள் தவிர வேறு நபர்கள் கடைகளை நடத்தி வருவதாக தெரியவருதால் தளஆய்வு செய்து உரிம நிபந்தனைகளை மீறி நடப்பவர்களது உரிமத்தை ரத்து செய்து மறுஏலம் கொண்டு வர மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.7935/12/அ9(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 249 நாள் : 25.10.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 106 நாள் 21.09.2012-ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலம் வார்டு எண். 51-ல் காந்திபுரம் 7வது வீதி தொடர்ச்சி வணிகவளாக கடை எண். 1 திரு.செ.அரசு என்பவருக்கு – ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவு பெற்றதால் - வாடகை உயர்வுடன் மீண்டும் மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்தல் - தொடர்பாக.

பார்வை : 1.அரசாணை எண்.147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2.அரசாணை எண்.92 ந.நி.ம.கு.வ.துறை நாள். 03.07.2007.
3. மாமன்ற தீர்மான எண். 320 நாள். 29.01.2009.
4. திரு.செ.அரசு அவர்களின் விண்ணப்ப நாள். 14.02.2012
5. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 107 நாள் 21.09.2012

********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 51-ல் வணிகவளாக கடை எண்.1 திரு.செ.அரசு என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடையின் மூன்றாண்டு உரிம காலம் 29.02.2012- வுடன் முடிவடைகிறது.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை இருபதாண்டுகள்) எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண். 164 நாள். 28.10.2004-ன்படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி கடையின் உரிமக்காலம் 29.02.2012-வுடன் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92- நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 03.07.07-ன்படி புதுப்பித்து 01.03.2012 முதல் கீழ்கண்டவாறு 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யலாம்.

| அமைவிடம் | உரிமம் காலம் முடியும் நாள் | உரிமம் புதிப்பிக்கப்பட வேண்டிய நாள் | மாத வாடகை ரூபாய் | அரசு ஆணை எண்.92 ந.நி.மற்றும் கு.வ.துறை நாள். 03.07.2007-ன்படி 15% உயர்வு செய்த மாத வாடகை ரூபாய் |
|---|---|---|---|---|
| வார்டு எண்.51-ல் காந்திபுரம் 7-வது வீதி தொடர்ச்சி வணிகவளாக கடை எண்.1 திரு.செ.அரசு | 29.02.2012 | 01.03.2012 | 4200/- | 4830/- |

மேற்படி கடைக்கு அரசு ஆணையின்படி ஏற்கனவே உள்ள மாதவாடகையில் 15% வாடகை உயர்வு செய்து 12.36% சேவை வரி கட்டணம் சேர்த்து வசூலிக்கவும் 01.03.2012 முதல் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் புதுப்பித்து திரு.செ.அரசு என்பவருக்கு வழங்கவும், கடை உரிம எண்.5140067 திருமதி.எம். சுமதிக்கு உரிமம் வழங்கபட்டு 31.3.2013-ல் ஒன்பது ஆண்டுகள் முடிவடைவதால் 01.04.2013 முதல் சந்தை மதிப்பில் வாடகை நிர்ணயம் செய்யவும், கடை உரிம எண். 5140068 தமிழ்நாடு நுகர்பொருள் வணிப கழகத்திற்கு உரிமம் வழங்கபட்டு 21.01.2013-ல் ஒன்பது ஆண்டுகள் முடிவடைவதால் 01.02.2013 முதல் சந்தை மதிப்பில் வாடகை நிர்ணயம் செய்து முதல் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் புதுப்பித்து 12.36%, சேவை கட்டணம் வசூலிக்கவும், புதுப்பிக்க மறுக்கும் கடையினை மறு ஏலத்திற்கு கொண்டு வரவும் அனுமதி பெற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 107 நாள் 21.09.2012ல் அலுவலகக்குறிப்பு ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.1622/12/அ9(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 250 நாள் : 25.10.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 107 நாள் 21.09.2012-ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண் 5

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - மத்திய மண்டலம் - வார்டு எண். 50-ல் டாடாபாத் யார்டு சாலை மற்றும் 100 அடி சாலை சந்திப்பில் - மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு 25'x 20' அளவு கொண்ட இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவு பெற்றதால் 15% வாடகை உயர்வுடன் மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்தல் தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண்.147, ந.நி.ம.கு.வ.(நநி4) துறை, நாள். 30.12.2000.
2. அரசாணை எண்.92ந.நி.(ம).கு.வ.துறை நாள். 03.07.2007.
3. மாமன்ற தீர்மான எண்.37 நாள். 22.06.2009.
4. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 16.07.2012-ம் தேதிய கடிதம்.
5. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 104 நாள் 21.09.2012

******

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.50-ல் டாடாபாத் யார்டு சாலை மற்றும் 100 அடி சாலை சந்திப்பில் மீன் வளர்ச்சிக்கழகத்திற்கு பார்வை (3)-ன்படி மாத வாடகையாக ரூ.6892/- யினை நிர்ணையம் செய்து, மூன்றாண்டு உரிம காலம் 31.07.2012-வுடன் முடிவடைகிறது.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான காலி இடத்தினை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை (அரசு ஆணை இருபதாண்டுகள் ) எண். 147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண். 164 நாள். 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி காலி இடத்தின் உரிமக்காலம் 31.07.2012-வுடன் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண். 92 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 03.07.2007-ன் படி புதுப்பித்து 01.08.2012 முதல் 31.03.2015 முடிய 15% உயர்வு செய்து கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யலாம்.

| அமைவிடம் | உரிமம் காலம் முடியும் நாள் | உரிமம் புதிப்பிக்கப்பட வேண்டிய நாள் | மாத வாடகை ரூபாய் | அரசு ஆணை எண்.92 ந.நி மற்றும் கு.வ.துறை நாள். 03.07.07-ன்படி 15% உயர்வு செய்த மாத வாடகை ரூபாய். |
|---|---|---|---|---|
| வார்டு எண்.50-ல் டாடாபத் யார்டு சாலை மற்றும் 100 அடி சாலை சந்திப்பில் - மீன் வளத்துறை-யினருக்கு 25'x 20' அளவு கொண்ட இடம் | 31.07.12 | 01.08.2012 | 6892/- | 7926/- |

மேற்படி கடைகளுக்கு அரசு ஆணையின்படி ஏற்கனவே உள்ள மாதவாடகையில் 15% வாடகை உயர்வு செய்து 12.36 சதவீதம் சேவை வரி கட்டணம் சேர்த்து வசூலிக்கவும் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் புதுப்பித்து வழங்கவும் அனுமதி பெற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 104 நாள் 21.09.2012ல் மீன் வளர்ச்சி துறையினரால் நடத்தப்படாமல் வேறு நபரால் நடத்தப்படுவதாக தெரியவருவதால் நேராய்வு செய்து அறிக்கையுடன் மீண்டும் பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டதை மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.5933/12/அ9(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 251 நாள் : 25.10.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 104 நாள் 21.09.2012-ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது. மேலும் மீன் வளர்ச்சி கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட கடை, வேறு நபரால் நடத்தப்படுவதாக நேராய்வின் போது தெரிய வந்தால் உரிமத்தை ரத்து செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண் 6

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூா் மாநகராட்சி – நகரமைப்பு பிரிவு - கிருஷ்ணராயபுரம் கிராமம் - மாநகராட்சிக்குச் சொந்தமான 70 சென்ட் பரப்பளவு இடம் - தமிழ்நாடு மின்சார வாரியத்தால் பாப்பநாய்க்கன்பாளையம் துணை மின் நிலையம் அமைக்க முன்நுழைவு அனுமதி வழங்குதல் - தொடா்பாக |
| பாா்வை | மாமன்ற தீா்மான எண் 6 நாள் 27.04.2012 |

பாா்வையில் காணும் மாமன்ற தீா்மானத்தில், அரசாணை (நிலை) எண் 25 நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கு (ந.நி.5) துறை நாள் 25.02.2000ன்படி தமிழ்நாடு மின்சார வாரியம், மாநகராட்சிக்கு வழங்கிய நிலத்தின் மதிப்பு மற்றும் அதற்கு ஈடாக மாநகராட்சியிடம் கோரும் நிலத்தின் மதிப்பு ஆகியவற்றிற்கு வருவாய்த்துறை மூலமாக நிலமதிப்பு நிா்ணயம் செய்து அரசிற்கு பிரேரணை அனுப்பி அரசின் ஒப்புதல் பெற்ற பின்னா் தமிழ்நாடு மின்சார வாரியம், மாநகராட்சிக்கு வழங்கிய நிலத்தின் மதிப்பு மற்றும் அதற்கு ஈடாக மாநகராட்சியிடம் கோரும் நிலத்தின் மதிப்பு ஆகியவவைகளை ஒப்பிட்டு கணக்கிட்டு, அதனால் ஏற்படும் வித்தியாசத் தொகையினை மின்வாரியத்திடமிருந்து பெற்ற பின்னா் 70 சென்ட் பரப்பளவு உள்ள மாநகராட்சி சொந்தமான நிலத்தை மின்வாரியத்திற்கு வழங்குவது தொடா்பாக அரசின் ஒப்புதலுக்கு அனுப்ப பாா்வையில் காணும் தீா்மானம் மாமன்றத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தற்போது மேற்பாா்வை பொறியாளா், கோவை மின் பகிா்மான வட்டம் அவா்கள், உடன் துணை மின் நிலையம் அமைக்க நிலம் தேவைப்படுவதால் முன்நுழைவு அனுமதி கேட்டு கடிதம் அனுப்பியுள்ளாா். மேலும், தமிழ்நாடு மின் உற்பத்தி கழகத்தின் மூலம் பெறப்பட்ட 12.11 சென்ட் இடத்தின் நில மதிப்பு மற்றும் மாநகராட்சியால் ஒதுக்கீடு செய்ய உள்ள 70 சென்ட் இடத்தின் நில மதிப்பு ஆகியவற்றின் வித்தியாசத் தொகையினை செலுத்த தயாராக உள்ளதாகவும் இசைவு தெரிவித்து உள்ளாா்கள்.

எனவே, தமிழ்நாடு மின் உற்பத்திக் கழகத்தின் மூலம் பெறப்பட்ட 12.11 சென்ட் இடத்தின் நில மதிப்புத் தொகை மற்றும் மின்சார வாரியத்திற்கு மாநகராட்சியால் ஒதுக்கிடு செய்ய உள்ள 70 சென்ட் இடத்தின் நில மதிப்புத் தொகையினை மாவட்ட நிா்வாகம் நிா்ணயம் செய்த பிறகு வித்தியாசப்படும் கூடுதல் தொகையினை மாநகராட்சிககு செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் முன்அனுமதி வழங்க நகராட்சி நிா்வாக ஆணையரின் ஒப்புதலுக்கு அனுப்ப மாமன்றத்தின் முடிவுற்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண் 13617/2010 /எம்.எச். 5

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் : 252 நாள் : 25.10.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூா் மாநகராட்சி வடக்கு மண்டலம் வாா்டு எண் 55-க்குட்பட்ட அம்மன் குளம் வாய்க்கால்மேடு சாலையின் நடுவே மூன்று உயா்மின் அழுத்த கம்பங்கள் உள்ளது எனவும், அதனை மாற்றி அமைக்க வேண்டும் எனவும் திரு டி. ராஜேந்திரன் அவா்கள், சட்டமன்ற மனுக்கள் குழுவிடம் விண்ணப்பம் அளித்துள்ளாா். (மனு எண் 6384)

மேற்படி மின்கம்பங்களை அகற்ற தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிா்மான கழகம், மாநகராட்சி மூலம் உரிய மதிப்பீட்டுத் தொகை செலுத்தும் பட்சத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டு, அதன்பேரில் மேற்படி மூன்று உயா்மின் அழுத்த மின்கம்பங்களை மாற்றி அமைக்க மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,10,170- செலுத்தவேண்டும் என உதவி செயற்பொறியாளா், தமிழ்நாடு மின் உற்பத்திக் கழகம், புலியகுளம் அவா்கள் தனது 22.09.2012 ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளாா்.

இந்நிலையில் கடந்த 26.09.2012 அன்று மாவட்ட ஆட்சியா் அலுவலகத்தில் நடைபெற்ற சட்டமன்ற மனுக்கள் குழு கூட்டத்தில் மேற்படி பொருள் பற்றி விவாதிக்கப்பட்டதில், இப்பணியை சிறப்பு நிகழ்வாக கருதி மேற்படி தொகையை தமிழ்நாடு மின் உற்பத்தி கழகத்திற்கு மாநகராட்சி மூலம் செலுத்தலாம் என சட்டமன்ற மனுக்கள் குழு அறிவுறுத்தப்பட்டதின் பேரில் மேற்படி தொகை ரூ. 2,10,170- தமிழ்நாடு மின் உற்பத்திக் கழகத்திற்கு மாநகராட்சி மூலம் செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 12289/2012 டி 3 (வ)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் : 253 நாள் : 25.10.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 24-09-2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்ச-த்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 10388/11/ எம்.டி.4 | கோயம்புத்தூர் மாநகராட்சி குறிச்சி, குனியமுத்தூர், ஆழியார் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு மின் தடை சரிசெய்ய புதிய 500KVA வாட்ஸ் ஜெனரேட்டர் பொருத்துதல் பணி. | 90.00 | 31-07-2012 இரண்டாம் அழைப்பு | திரு. சபரி எலக்ட்ரிகல்ஸ், கோயம்புத்தூர் 4.84% அதிகம் - | திரு. சபரி எலக்ட்ரிகல்ஸ், கோயம்புத்தூர் 4.84% அதிகம் - - |

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 21.09.2012ம் தேதிய ஆணையர் அவர்களின் உத்தரவின்படி தொழில்நுட்ப கூறுகள் தகுதிபெற்ற திரு சபரி எலக்டிரிகல்ஸ் அவர்களின் விலைப்புள்ளி மதிப்பீட்டிற்கு 4.84% அதிகம் உள்ள விலைப்புள்ளி 24.09.2012ம் தேதிய திறனாய்வுக்குழு கூட்டத்தின் முடிவின்படி ஏற்கப்பட்டது. இப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு பணி உத்தரவு வழங்க வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 05.10.2012ம் தேதி முன் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது திரு சபரி எலக்ட்ரிகல்ஸ் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம். ந.க.எண் 10338/2011 /எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 254 நாள் : 25.10.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்டசி – கவுண்டம்பாளையம் வடவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டம் - 1) அதிகபட்ச அளவு குடிநீர் பெற (Ultimate stage) நீர்உந்து மற்றும் அதற்கான உபகரணங்கள் பொருத்துதல் 2) வீரபாண்டி பிரிவு பூஸ்டர் நிலையத்தில் புதியதாக 315 KVA கொண்ட (200 குதிரைத் திறன் ஜெனரேட்டர் பொருத்தி இயக்குதல் - தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை கோர மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பு |

கோயம்புத்தூர் மாநகராட்சி கவுண்டம்பாளையம் - வடவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தற்போது தினசரி 11 மில்லியன் குடிநீர் பெறப்பட்டு நாள்ள ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 70 லிட்டர் குடிநீர் மட்டுமே விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

முன்னாள் கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்வதுபோல் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 135 லிட்டர் விநியோகம் செய்ய அதிகபட்ச அளவு அதாவது தினசரி 23 மில்லியன் லிட்டர் (Ultimate stage) குடிநீர் பெற அதற்கான நீர்உந்து மற்றும் உபகரணங்கள் பொருத்தவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைக் கோரலாம்.

நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பில்லூர் கோட்டம்,கோவை-4 அவர்களது கடிதத்தில் ( கடிதம் எண் FGV/JDO/EE/Maint(Pillur)/CBE/2012 நாள் 18.09.2012) கவுண்டம்பாளையம்-வடவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் தினசரி 6 முதல் 9 மணிநேரம் மின்தடை காரணமாக வரையறுக்கப்பட்ட குடிநீர் அளவு வழங்க இயலவில்லை. எனவே, வீரபாண்டி பிரிவு பூஸ்டர் நிலையத்தில் புதிய ஜெனரேட்டர் 315 KVA (200 குதிரைத் திறன் ) பொருத்தி தற்போதைய குடிநீர் விநியோக அளவில் முன்னேற்றம் செய்யவும், அதற்கான நடவடிக்கையை துவக்குமாறும் மாநகராட்சி ஆணையர் அவர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, மேற்படி திட்டத்தில் வீரபாண்டி பிரிவு பூஸ்டர் நிலையத்தில் புதிய ஜெனரேட்டர் 315 KVA (200 குதிரைத் திறன் ) பொருத்தி இயக்கவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைக் கோரலாம்.

அலுவலகக்குறிப்பு :- 1) கவுண்டம்பாளையம் வடவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் அதிகபட்ச அளவு குடிநீர் பெற (Ultimate stage) நீர்உந்து மற்றும் அதற்கான உபகரணங்கள் பொருத்தவும் 2) வீரபாண்டி பிரிவு பூஸ்டர் நிலையத்தில் புதியதாக 315 KVA கொண்ட (200 குதிரைத் திறன் ஜெனரேட்டர் பொருத்தி இயக்கவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை கோரவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 4603/2012 /ப.வ.(எம்)

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 255 நாள் : 25.10.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்புப் பிரிவு - காந்திபுரம் பகுதி சாலைகளில் மேம்பாலம் கட்டுதல் - பணி மேற்கொள்வதற்காக மாநகராட்சி சாலைகளை நெடுஞ்சாலைத்துறைக்கு தற்காலிகமாக ஒப்படைக்க அனுமதி கோருவது- தொடர்பாக |
| பார்வை | 1. மாமன்ற தீர்மான எண் 66 நாள் 01.06.2012<br>2. கண்காணிப்பு பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நெடுஞ்சாலைத்துறை, அவர்களின் கடிதம் எண் 143/2011-12/ வ.அ.-1 நாள் 28.09.2012 |

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட காந்திபுரம் பகுதி சாலைகளில், மேம்பாலம் கட்டும் பணி மேற்கொள்ள கீழ்கண்ட மூன்று சாலைகளை நெடுஞ்சாலைத்துறைக்கு முன்நுழைவு அனுமதி வழங்கியும் தற்காலிகமாக பணி மேற்கொள்ள மூன்று சாலைகளை அத்துறைக்கு ஒப்படைக்கவும் பணி முடிவுற்றவுடன் இச்சாலைகள் மற்றும் மேம்பாலத்தினை மாநகராட்சிக்கு ஒப்படைக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்ய பார்வை 1-ல் காணும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

| வ.எண் | மேம்பாலம் அமையவுள்ள சாலை | சாலையின் நீளம் |
|---|---|---|
| 1 | வ.உ.சி. பார்க் சாலை (300மீ)<br>டாக்டர். நஞ்சப்பா சாலையிலிருந்து 300 மீ வரை | 300 மீ |
| 2 | நூறடி சாலை - ஜி.பி. சந்திப்பிலிருந்து 300 மீ வரை<br>(காந்திபுரம் 3 வது வீதி சந்திப்பு வரை) | 300 மீ |
| 3 | சின்னசாமி நாயுடு சாலை – 300 மீ<br>ஜி.பி. சந்திப்பு முதல் 300 மீ வரை | 300 மீ |

இந்நிலையில் பார்வை 2ல் காணும் கடிதத்தில் மேற்படி சாலைகளை காந்திபுரம் பகுதி மேம்பாலம் பணிக்காக நிரந்தரமாக மாற்றம் செய்ய கோரியுள்ளனர்.

மாநகராட்சி சாலைகளை வேறு துறைக்கு அரசின் அனுமதி இல்லாமல் நிரந்தரமாக வழங்க இயலாது. எனவே, பார்வை 2-ல் காணும் கடிதத்தில் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, காந்திபுரம் பகுதியில் மேம்பாலப் பணி மேற்கொள்ள மேற்படி மூன்று சாலைகளை மேம்பாலப் பணி நிறைவு பெற்றவுடன் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் சாலைகளை நல்லமுறையில் அமைத்து மீண்டும் மாநகராட்சிக்க ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் தற்காலிகமாக நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண் 4755/2012 /எம்.எச். 5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 256 நாள் : 25.10.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட 100 வார்டுகளில் உள்ள குடிசைப்பகுதிகள், அழுத்தம் குறைவாக உள்ள பகுதி, மேடான பகுதி, பிரதான குழாய் கசிவு ஏற்பட்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படும்பொழுது குடிநீர் தடை ஏற்படும் காலங்கள் மற்றும் அன்றாட குடிநீர் சம்பந்தமான புகார் ஆகிய பிரச்சனைக்கேற்றவாறு டேங்கர் லாரிகள் மூலம் பாரதி பூங்கா மேல்நிலைத் தொட்டி

(HLR), கணபதி (MSR) மேல்நிலைத் தொட்டி, வரதராஜபுரம் மேல்நிலைத் தொட்டி மற்றும் புலியகுளம் மேல்நிலைத்தொட்டிகளிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தற்சமயம் தனியார் டேங்கர் லாரியின் ஒப்பந்தத்தொகை முடிவடையவுள்ளதால் புதியதாக உத்தேச செலவினம் ரூ75.00 இலட்சத்திற்கு மாமன்றம் தனது தீர்மான எண்.161 நாள் 30-07-2012 அன்று நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இப்பணிக்கு கடந்த 23-08-2012 அன்று முதல் அழைப்பாக இரு உறைகள் முறையில் மின்னனு (e-tender) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு.கே.எஸ்.ராமலிங்கம் மற்றும் திரு.ஜி.சசிக்குமார், கோவை ஆகியோர் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளனர்.

மேற்படி, ஒப்பந்தப்புள்ளிகளின் தகுதிகாண் கூறுகள் (Qualification Criteria) திறனாய்வு செய்ததில் திரு.கே.எஸ்.ராமலிங்கம், கோவை மற்றும் திரு.சசிக்குமார், கோவை ஆகியோர் தேர்வு பெற்றுள்ளனர்.

எனவே, மேற்படி தகுதிகாண் கூறுகளில் தேர்வு பெற்றுள்ள திரு.கே.எஸ்.ராமலிங்கம், மற்றும் திரு.சசிக்குமார் ஆகியோரது ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று விலைப்புள்ளி உறையை திறக்க ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழுவின் பரிந்துரையை ஏற்று ஆணையர் அவர்கள் 28-08-2012-ல் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

அதனை தொடர்ந்து 31-08-2012-ல் விலைப்புள்ளி உறைகள் திறக்கப்பட்டதில் திரு.கே.எஸ்.ராமலிங்கம் மற்றும் திரு.சசிக்குமார் அவர்கள் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் அளித்துள்ளார்கள்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | | 3500 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | நடை ஒன்றிற்கு ரூ. | எண்ணிக்கை | நடை ஒன்றிற்கு ரூ. |
| 1 | திரு.ஜி.சசிகுமார், கோவை | 1 | 962 | 1 | 566 |
| 2 | திரு.கே.எஸ்.ராம-லிங்கம், கோவை | 1 | 999 | 1 | 599 |

மேற்படி விலைப்புள்ளிகளில் முதலாவதாக குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.ஜி.சசிக்குமார் அவர்களிடம் மேலும் விலையை குறைத்து கொடுக்க கேட்டதில், அவர் தமது 15-09-2012-ம் தேதிய கடிதத்தில் டீசல் விலையேற்றம் மற்றும் லாரி உதிரிபாகங்கள் விலையேற்றம் ஆகியவற்றை கருத்தில்கொண்டு கீழ்கண்டவாறு விலைக்குறைப்பு செய்து கொடுத்துள்ளார்.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை (ரூபாயில்) | | விலைக்குறைப்பிற்கு பின் குறிப்பிட்டுள்ள தொகை (ரூபாயில்) | |
|---|---|---|---|---|---|
| | | 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரி நடை ஒன்றிற்கு ரூ. | 3500லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரி நடை ஒன்றிற்கு ரூ. | 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரி நடை ஒன்றிற்கு ரூ. | 3500லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரி நடை ஒன்றிற்கு ரூ. |
| 1 | திரு.ஜி.சசிக்குமார் | 962 | 566 | 928 | 550 |

தற்சமயம் உள்ள ஒப்பந்தப்புள்ளி முடிவடைய உள்ளதாலும், கோடை காலம் ஆரம்பிக்க உள்ளதாலும் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுவதை சமாளிக்கவும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கவும் அத்தியாவசிய பணியான குடிநீர் விநியோகத்தை கருத்தில் கொண்டு மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் திரு.ஜி.சசிக்குமார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை (விலைக்குறைப்பிற்குபின் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்திற்கு) ஏற்க மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.7041 / 2012 / எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 257 நாள் : 25.10.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி – வீடற்றோர் தங்கும் விடுதி அமைத்தல் - தொடர்பாக |
|---|---|

உச்சநீதிமன்றம் அனைத்து மாநில அரசுகளுக்கும் நகர்ப்புற வீடற்ற மக்களுக்கு நிரந்தரமான தங்கும் வசதியையும் அடிப்படைத் தேவைகளையும் வழங்கவேண்டும் என்று வழிகாட்டியுள்ளது. மார்ச் 31, 2011 மக்கள் தொகையின் அடிப்படையில் 62 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டு 24 மணிநேரமும் இயங்கும் வீடற்றோர் தங்கும் விடுதிகள் படிப்படியாக அமைக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூா் மாநகராட்சியுடன் இணைந்து உச்சநீதிமன்ற மாநில ஆலோசகா் மற்றும் அலுவலா்கள் கோயம்புத்தூா் மாநகராட்சியில் வீடற்றோா் கணக்கெடுக்கும் பணியை 11.07.2012 முதல் 13.07.2012 வரை மேற்கொண்டனா்.

கோயம்புத்தூா் மாநகரமானது தமிழ்நாட்டில் இரண்டாவது மிகப்பெரிய நகரமாகவும், இந்திய அளவில் 15-வது நகரமாகவும் உள்ளது. கணக்கெடுப்புப் பணி முடிந்து அதனை ஆய்வு செய்து ஆய்வு அறிக்கை சமா்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில், மொத்தம் வீடற்ற மக்கள் 546 என்றும், தனி நபா்கள் 293 என்றும், குடும்பமாக உள்ளவா்கள் 253 என்றும் கண்டறியப்பட்டது.

மேற்படி 546 நபா்களுக்கும் மொத்தம் 7 தங்கும் விடுதிகள் தேவைப்படுவதாகவும், அதில் ஒரு விடுதி பெண்களுக்கு மட்டும் என்றும், ஒரு விடுதி குடும்பமாக உள்ளவா்களுக்காகவும் ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டல வாரியாகவும், வாா்டுகள் விபரமாகவும் வீடற்றோா் கணக்க விபரம் பின்வருமாறு

| வ.எண் | மண்டலம் | வாா்டுகள் | ஆண்கள் | பெண்கள் | குழந்தைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வடக்கு | 1, 2, 3, 4, 28, 41, 43, 44, 45 | 100 | 18 | 15 | 133 |
| 2 | தெற்கு | 85, 86, 95 | 21 | 8 | 6 | 35 |
| 3 | கிழக்கு | 64 | 8 | 3 | 4 | 15 |
| 4 | மேற்கு | 5, 7, 12, 20, 22, 23, 24 | 161 | 63 | 60 | 284 |
| 5 | மத்தியம் | 25, 54, 82, 72, 73 | 53 | 11 | 15 | 79 |
| | | மொத்தம் | 343 | 103 | 100 | 546 |

அதன்படி கோயம்புத்தூா் மாநகராட்சியில் பயன்பாட்டில் இல்லாத பள்ளிகளின் விபரம் கல்வித்துறையில் இருந்து பெறப்பட்டது. அவற்றில் சின்ன எல்லை சந்து பள்ளிக்கட்டிடம் தோ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த சின்ன எல்லை சந்து பள்ளிக்கட்டிடம் தற்சமயம் மத்திய மண்டலத்தில் 25 வது வாா்டில் உள்ளது. அனைத்து மண்டலங்களுக்கும் மத்தியில் உள்ளது.

எனவே, முதல் கட்டமாக அப்பள்ளியில் வீடற்றோா் தங்கும் விடுதி அமைக்க அப்பள்ளிக் கட்டிடத்தினை உபயோகப்படுத்திக்கொள்ள கல்விக்குழுவின் அனுமதிக்கு பொருள் வைக்கப்பட்டதில், கல்விக்குழு தீா்மானம் எண் 10 நாள் 21.09.2012 ல் மாமன்ற முடிவுக்கு வைக்கலாம் என தீா்மானிக்கப்பட்டதால் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண் 5625/2011 /எம்.இ 2

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் : 258 நாள் : 25.10.2012</u>**

25வது வாா்டில் உள்ள சின்ன எல்லை சந்து பள்ளிக் கட்டிடத்தை, வீடற்றோா் தங்கும் விடுதி அமைக்க உபயோகப்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கி தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

ஆசிய நாடுகளின் நகா்புர வளா்ச்சிக்கு உதவி செய்யும் (CDIA – Cities Development Initiative Asia) நிறுவனத்தை ஜொ்மன் அரசாங்கமும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் (Asia Development Bank) இணைந்து நடத்துகிறது. கோவை மாநகர வளா்ச்சிக்கான தனது ஆலோசனைகளை வழங்கி, நிதியுதவி செய்ய இந்த அமைப்பு முன்வந்துள்ளது.

இதற்கென மேற்படி நிறுவனம் தனது 80% பங்களிப்பான ரூ.2,53,34,400/- (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்து மூன்று இலட்சத்து முப்பது நான்காயிரத்து நானூறு மட்டும்) மானியமாக கோவை மாநகராட்சியின் வளா்ச்சி திட்டமிடுதலுக்கு வழங்க உத்தேசித்துள்ளது. இத்தொகையினை நகர அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல், 24x7 திட்டத்திற்கான நிதி பெற உதவி செய்தல், மாநகராட்சி அலுவலா்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் மாநகராட்சியால் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களான,

1. குப்பையிலிருந்து மின்சாரம் தயாரித்தல்
2. மோனோ ரயில் ஆகிய திட்டங்களின் செயலாக்க வாய்ப்புகள் பற்றிய பரிந்துரை (Feasibility Report) தயாரித்து வழங்குதல்

போன்றவற்றிக்கு பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தொகையினை மேற்கண்ட CDIA நிறுவனத்திடமிருந்து பெறுவதற்கு குறைந்தபட்ச இருபது சதவீத (20%) பங்குத்தொகையான ரூ. 50.67 இலட்சத்தினை மாநகராட்சி தனது பங்களிப்பாக அளிக்க வேண்டும் என மேற்கண்ட நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதுகுறித்து நகராட்சி நிா்வாக ஆணையா், சென்னை அவா்களின் ஒப்புதல் பெற்று CDIA நிறுவனத்தின் நிதியுதவியைப் பெற தேவையான விண்ணப்பங்கள் சமா்ப்பித்தல் உள்ளிட்ட

நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் 20% பங்குத்தொகையான ரூ. 50.67 இலட்சத்தினை மாநகராட்சியின் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

அ) நகராட்சி நிர்வாக ஆணையரது ஒப்புதல் பெற்று மேற்படி நிறுவனத்திடம் மாநகராட்சியின் வளர்ச்சித் திட்டங்களுக்கு தேவையான நிதியுதவி பெற விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் உள்ளிட்ட மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) மாநகராட்சியின் 20% பங்குத் தொகையான ரூ. 50.67 இலட்சத்தினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 5799/2012 /ஜேஎன் 4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 259 நாள் : 25.10.2012</u>**

அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆவிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி